KAALAI KATHIR-13-DEC-2010

# நாட்டில் ஊழல் பெருகி விட்டது

## ஜக்கி வாசுதேவ் வேதனை

**சேலம்:** ''நாட்டில் தற்பொழுது ஊழல் பெருகிவிட்டது, மனிதநேயம் குறைந்து வருகிறது,'' என, சத்குரு ஜக்கி வாசுதேவ் வேதனையுடன் தெரிவித்தார்.

சேலத்தில் உள்ள ஈஷா அறக்கட்டளை சார்பில், சேலம் மரவனேரியில் உள்ள அரசு கலைக் கல்லூரி மைதானத்தில் 'ஆனந்த அலை' எனும் மகாசத்சங்கத்தை நடத்தியது. இதில் சத்குரு ஜக்கி வாசுதேவ் கலந்துகொண்டார். முன்னதாக நிருபர்களை சந்தித்து அவர் கூறியதாவது:

மனிதனுக்கு பொருளாதாரம் வளர வளர நோய்கள் அதிகரிக்கிறது. இதுபோன்ற நோய்கள் வராமல் தடுக்க ஆன்மிகத்தின் ஒரு பகுதியான யோகாவில் ஈடுபடவேண்டும். இன்று தமிழ்நாட்டில் 30 சதவீதம் பேர் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது மிகுந்த வேதனையளிக்கிறது.

இன்றைய இளைஞர்கள் நல்லவர்கள் தான். ஆனால், அவர்களுடைய சூழ்நிலை வேகமாக முன்னேற வேண்டும் என்று சில தவறான செயல்களில் ஈடுபட்டு வழிமாறி சென்று விடுகின்றனர். இவர்களுக்கென்று வேலை வாய்ப்புகளை உருவாக்கி தர வேண்டும் அப்போதுதான் இது போன்ற தவறான பாதைகளுக்கு செல்லமாட்டர். இளைஞர்கள் விளையாட்டில் அதிக ஆர்வம் செலுத்த வேண்டும்.

கிராமங்களில் படிப்பறிவு குறைந்து வருகிறது. தமிழகத்தில் உள்ள அரசு பள்ளிகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அதில் சில மேம்பாடுகளை செய்வதற்கு எங்களுடைய ஈஷா அறக்கட்டளை சார்பில், இரண்டாயிரம் பள்ளிகளுக்கு உதவி செய்யவுள்ளோம்.

வருங்காலத்தில், தமிழகத்தில் உள்ள எல்லா பள்ளிகளிலும் யோகாவை ஒரு பாடமாக நடத்த வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளோம். அதற்கும் எங்களுடைய மையம் சார்பில் ஒவ்வொரு பள்ளிக்கும் யோகா ஆசிரியர்களை நியமனம் செய்து பாடம் நடத்தவுள்ளோம்.

இன்றைய காலக்கட்டத்தில் தேர்தல் நடக்கும்பொழுது ஒவ்வொருவரும் கட்டாயம் ஓட்டு போடவேண்டும். ஆனால், பெரும்பாலானோர் அன்று விடுமுறை கிடைக்கிறது என்று குடும்பத்துடன் ஜாலியாக சுற்றுலா சென்றுவிடுகின்றனர். கண்டிப்பாக இதை தவிர்த்து அனைவரும் கட்டாயம் ஓட்டு போடவேண்டும்.

அடுத்தாண்டு நல்வழியில் ஈடுபட்டு வரும் ஆன்மிக குருக்களை ஒன்று சேர்த்து ஒரு மாநாடு நடத்தவுள்ளோம். யோகா என்பது ஒரு அறிவியல் தொழில்நுட்பமே. அதைவிட்டு சில ஆன்மிக வாதிகள், நான் காட்டில் இருந்து தங்கம் எடுத்து தருவேன், வாயில் இருந்து லிங்கம் எடுத்து தருவேன் என்று முடியாததை சொல்லி மக்களை ஏமாற்றி வருகின்றனர். அப்படிப்பட்டவர்கள் உண்மையான ஆன்மிக குருவே கிடையாது. இதுபோன்றவர்களிடம் மக்கள் உஷாராக நடந்துகொள்ள வேண்டும்.

இன்று நாட்டில் ஊழல் பெருகிவருகிறது, தற்பொழுது ஊழல் கலாச்சாரம் தான் நடந்து கொண்டிருக்கிறது. இதை ஒழிக்க, இந்த ஜனநாயக நாட்டில் எல்லோரும் சேர்ந்து ஒரு நல்ல ஜனநாயகத்தை உருவாக்க வேண்டும். அதுபோல, மனித நேயம் குறைந்து வருகிறது. ஒவ்வொருவரும் மனிதநேயத்துடன் நடந்துகொள்ள வேண்டும்.

புவி வெப்பமடைவதை தடுக்கும் பொருட்டு எங்களுடைய ஈஷா யோகா மையத்தின் சார்பில் பசுமை இயக்கம் தொடங்கப்பட்டு மரக்கன்றுகள் நடப்பட்டு வரப்படுகிறது. இன்னும் ஆறு ஆண்டுகளில் 11 கோடி மரக்கன்றுகள் நட திட்டமிட்டுள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## சிறு குழந்தைகளும் பாதிப்பு

ஜக்கி வாசுதேவ் கூறும் போது, "நான் ஒருமுறை திருச்சியில் நடந்த விழாவுக்காக சென்றிருந்தேன். அப்பொழுது, அங்குள்ள ஒரு பள்ளியில் மாணவர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தேன். நான் ஐந்தாம் வகுப்பு படிக்கும் ஒரு மாணவனிடம், 'பெரிய ஆளாகி நீ என்னவாக ஆக வேண்டும் என்று ஆசைப்படுகிறாய்' என்று கேட்டேன்.

"அதற்கு அந்த மாணவன், 'நான் படித்து பெரிய ஆளாகி ஆர்.டி.ஓ.,வாக (போக்குவரத்து அதிகாரி) ஆக வேண்டும்' என்றான். நான் அதற்கு, 'ஏன் அந்த வேலை உனக்கு பிடிக்கும்' என்றேன். அதற்கு அந்த மாணவன், 'அந்த வேலையில்தான் அதிகம் லஞ்சம் கிடைக்கும்; அதிகம் சம்பாதிக்கலாம்' என்று கூறுகிறான். அந்த அளவுக்கு ஊழல், லஞ்சம் கலாச்சாரமாக மாறியுள்ளது,'' என்றார்.





சேலம் அரசு கலைக்கல்லூரி மைதானத்தில் ஈஷா யோக மையம் சார்பில் நடந்த 'ஆனந்த அலை' மகாசத்சங்க நிகழ்ச்சியில் சத்குரு ஜக்கி வாசுதேவ் பேசினார்.
**அடுத்த படம்:** மகாசத்சங்க நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள்.